அமரர் அதிபர் க.சிவபாலன் அவர்களின் சேவை (1962-1968) நினைவாக....

# சாரல்

இதழ்: 08

ஆனித்திங்கள் 2016

வள்ளுவர் ஆண்டு 2047

**OBA** ஆண்டு செய்தி மடல்

30.06.2016

பழையமாணவர் சங்கம்

தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி



## ஊருக்கு உழைத்த உத்தமர் எங்கள் அதிபர் சிவபாலன்

- வே.வரதசுந்தரம் -

ஊருக்கு உழைத்தல் யோகம் என்பர். இதனை வள்ளுவர் ஒப்புரவு என்பார். தன்னலம் கருதாது, தன்குடும்ப நலம் கருதாது பிறர்க்கு உரியாளனாக ஊருக்கு உழைத்த பெருமகன் எங்கள் அதிபர் சிவபாலன் அவர்கள். அன்னாரிடம் பல்லாண்டுகள் பாடங்கேட்டுப் பயின்ற காலத்திலும், பின்னர் அவர் குடைநிழற்கீழ் உதவி ஆசிரியனாகப் பல்லாண்டுகள் பணியாற்றிய காலத்திலும் அன்னாரின் ஊருக்கு உழைக்கும் பண்பினைக் கண்டிருக்கின்றோம்

இரு தசாப்தங்களாக இராமகிருஷ்ணமிஷன் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக, துணை அதிபராக, கடமையாற்றி மக்கள் மத்தியில் சேவையாற்றிய திருக்கோணமலை மண்ணில் "சிவபாலன் சகாப்தம்" படைத்த திரு. க.சிவபாலன் அவர்கள் தனது 87வது அகவையில் லண்டனில் காலமானார்.

நான் மாணவனாக பல்லாண்டுகள் அவரது காலடியில் ஆங்கிலம் படித்த நினைவுகள் வருகின்றன. ஒன்றா, இரண்டா எடுத்துச் சொல்ல, எழுத்தில் வடிக்க! அவருக்கும் எனக்கும் இருந்து உறவு அரை நூற்றாண்டுக்கு மேலானது.

ஆங்கில பாணியில் கோட், சூட்டை அணிந்து தனது மனையில் இருந்து (பிருந்தாவனம் அவரது மனையின் பெயர்) பெருந்தெருவழியாக வந்து டொக்கியாட் வீதி ஊடாக அவர் வரும் பவனி இன்றும் பசுமையாக இருக்கின்றது. அந்த இராஜநடை யாருக்குத்தான் வரும் அவரது தோற்றத்தில் அப்படியொரு ஆளுமை.

கல்வித்துறையிலும் அவரிடம் ஆளுமை காணப்பட்டது. வகுப்பறை முகாமைத்துவம் என்றாலும் சரி, பாடசாலை முகாமைத்துவம் என்றாலும் சரி, அவையாவும் அவருக்கு கைவந்த கலை. பாடசாலையை அவர் ஒரு சிறு உலகமாக (A Miniature Society) சிறு சமூகமாகப் பார்த்தார். மாணவனை ஒரு நல்ல சமூகத்திற்கு தயார் செய்வது பாடசாலையின் நோக்கமாக இருக்க வேண்டும் என்பதே அவரது தூரநோக்கு. பாடசாலை முகாமைத்துவத்தினை இவ்வாறு ஆற்றுப்படுத்தி பெருமளவு வெற்றி கண்டார். தனது இளமைக்காலத்தில் இடதுசாரிச் சிந்தனையால் ஈர்க்கப்பட்டதால் அவர் 1952ம் ஆண்டு பொதுத் தேர்தலில் திருகோணமலைத் தேர்தல் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார். பின்னர் 1957ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் திருகோணமலை நகராண்மைக் கழகத்தில் 9ம்வட்டாரத்தில போட்டியிட்டுத் தோல்விகண்ட அவர், பின்னர் 1958ல் பின் தங்கிய 9ம் வட்டார உறுப்பினராக வெற்றிபெற்றார்.

### தூரநோக்கு

ஒழுக்க விழுமியங்களிலும், கல்வியிலும், மொழியியல் தேர்ச்சியிலும், இணைப்பாடவிதானங்களிலும் சாதனை படைக்கும் ஒரு முன்மாதிரியான கல்லூரி

### நோக்கு

கல்லூரியின் அடைவுகளை உச்சப்படுத்துவதற்கும், தேவையான வளங்களைத் தேடிக்கொள்வதற்கும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் பழைய மாணவர்களினதும் வளவாளர்களினதும் பங்களிப்புடன் கூடிய சேவை அர்ப்பணிப்பு.

### Vision

"An exemplary College in creating best records in discipline, education, Lingual proficiency and co-curricular activities."

### Mission

"Dedication of Service with the contribution of the resource persons and the old students living in inland and abroad for Obtaning the required resource and Maximizing the achievements of the college"

வெளியீடு : OBA, Trinco, Hindu
e-mail : oba@trincohindu.sch.lk
Web : www.trincohindu.sch.lk/oba/index.htm

ஆலோசகர் : திரு.செ.பத்மசீலன்
பதிப்பாசிரியர் : திரு.நல்லதம்பி குமணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971ம்ஆண்டு இரத்மலானை இந்துக் கல்லாரியில் அதிபரானார். அங்கு மாணவரிடையே ஆங்கில அறிவு போதாதென்று கண்ட அவர் முழுப் பாடசாலையிலும் ஒரே வேளையில் ஆங்கில வகுப்பு நடைபெறக் கூடியதாக நேரசூசியை மாற்றி அமைத்தார். மிகவும் குறைவான மாணவர்களுக்கு திறமையான ஆசிரியர்களை நியமித்தார். 1970 பொதுத்தராதரத் தேர்வில் ஆங்கிலத்தில் 5வீத சித்தி கிடைத்த கல்லூரியில் 1973 ஆம் ஆண்டு பெறுபேறு வந்த போது 75 வீதமாக அதிகரித்தது இப்படி மாணவர்களிலும் சாதாரணர்களிடத்து கூடிய கரிசனை காட்டுவது அவரது இயல்பு.

1974ம் ஆண்டு கண்டி பகுதியில் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்ற பொழுது மலையக தோட்டப் பாடசாலைகளின் வளர்ச்சியில் ஈடுபாடு காட்டினார். 1977ல் மலையகத்தலைவர் சௌ.தொண்டமானின் வேண்டுகோளின் பேரில் கல்வி அமைச்சில் மலையகத்தோட்டப் பாடசாலைகளுக்கென ஒரு தனியான பிரிவு அமைக்கப்பட்டது. அப்பிரிவின் தலைவராக பிரதம கல்வி அதிகாரியாக திரு. சிவபாலன் நியமிக்கப்பட்டார். தோட்டப் பாடசாலை அதிபர்களுக்கு பல கருத்தரங்குகளை நடத்தினார். அவற்றில் தானும் பங்கேற்றார். தராதரப்பத்திரங்கள் இன்றி மலையகத் தோட்டப் பாடசாலைகளில் படிப்பித்த ஆசிரியர்களை ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிக்கு அனுப்பி இரண்டு ஆண்டு கால பயிற்சி அளித்து அரசு பொறுப்பேற்ற பாடசாலைகளில் நியமனம் வழங்கினார். மலையகத் தோட்டப்பாடசாலைகளில் ஆறாம் வகுப்புக்களை ஆரம்பிக்க முயற்சி எடுத்தார். அப்படி சாதாரணர் வாழ்க்கையில் அவருக்குக் கரிசனை இருந்தது.

அறிவின் பயன் யாது என்று நாம் சிந்தித்தால் பல்வேறு வரைவிலக்கிணம் கூறப்படும். பட்டம் பெறுவது என்பார் சிலர். பதவி பெறுவது என்பார் பிறிதொரு சாரார்.

"மற்றவர்களின் துயரை ஏன் மற்றைய உயிரினங்களின் துன்பத்தினைப், 'பிறிதின் நோய்', இவற்றைத் தன்நோய், தன் துன்பமாய் பார்ப்பது அறிவு என்பார் வள்ளுவப் பெருந்தகை.

**"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்**
**தன்நோய்போற் போற்றாக் கடை"**

அவரது சேவையில் இக்கொள்கை மேலோங்கி நின்றது. 1964ம் ஆண்டு என்று ஞாபகம். அப்போது சூறவளி திருகோணமலையை கொடூரமாகத் தாக்கியது. பிற்பகல் தொடங்கிய மழை, சூறாவளி கோரத்தாண்டவம் ஆடின. ஒரு கட்டத்தில் நாம் அழிந்துவிடுவோம் என்று அஞ்சினோம். மக்கள் உயிர்களை இழந்தனர். வீடுகளை இழந்தனர். நெடுஞ்சாலைகள், தெருக்களில் போக்குவரத்துக்கள் தடைபட்டன.

கையறு நிலையில் கலங்கிய மக்கள் மத்தியில் இந்துக்கல்லூரி மாணவர் அமைப் பொன்றைத் திரட்டி இரவு பகலெனப் பாராது சிரமதான வேலை மூலம் மக்களுக்கு உதவினான் ஒரு தலைவன். அதுவே சிவபாலன். பிறிதின் நோய். தன்நோய் என்று கண்டார். தனது மாணவர் குழாத்திடத்தும் அந்த உணர்வை ஊட்டினார்.

அதுமட்டுமா, 1967இல் வணபிதா பிராடியுடன் இணைந்து வீடற்றவர்களுக்கு அன்புவழிபுரம், செல்வநாயகபுரம், அபயபுரம் ஆகிய பகுதிகளில் வீடுகளைச் சிரமதானம் மூலம் அமைத்துப் பணிபுரிந்தார். இதற்கென இந்துக்கல்லூரி, சிங்கள மகாவித்தியாலயம் மாணவர்களை அணிதிரட்டிச் செயற்பட்டார். மாணவர்கள் இடத்து மக்கள்சேவை உணர்வை ஊட்டினார்.

திருக்கோணமலை பிரஜைகள் குழுத் தலைவராக 1984ம் ஜனவரி தொடக்கம் துணிச்சலுடன் செயற்பட்டார். மனித உரிமை மீறல்களை கண்டித்து குரல் கொடுத்தார். 1986இன் பின்னர் மேலைநாடுகள், ஜேர்மன், சுவிற்சிலாந்து, கொலன்ட், இங்கிலாந்து போன்ற பல நாடுகளுக்குச் சென்று இலங்கையில் அன்று நிலவிய மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்தினார்.

மிகவும் கொடூரமான பயங்கரவாதச் சட்டம், அவசரகாலச்சட்டம், ஆகியவற்றின் கீழ் கைதாகித் தடுத்துவைக்கப்பட்டு சிறையில் உழன்ற இளைஞர் களுக்காக விசாரனைகளில் ஆஜராகி வாதிட்டு சமூக நீதிக்காகப் போராடினார்.

திருகோணமலையில் வன்செயல்கள் வெடித்த போது இங்கு அப்போது சிறுபாண்மை யினரான சிங்கள சகோதரர்களின் உயிர் உடைமை களைக் காப்பதில் கரிசனை காட்டிய அவர், தனது இரு புதல்வர்களையும் இன வன்செயல்களில் இழந்தார். இனக்கலவரத்தில் மூத்த புதல்வன் கிரிதரனை 1983 ஜூலை மாதத்தில் களுபோவிலையிலும், தனது இரண்டாவது மகன் கங்காதரனை நிலாவெளியிலும் இழந்தார். இருந்தும் அவரிடத்து இனவாதம் கிஞ்சித்தும் இருக்கவில்லை. பல ஆண்டுகளின் பின்னர், இவை பற்றி பேச்சு எழுந்தபோது அவர் என்னிடம் துயரம் மிக்க குரலில் "வரதசுந்தரம் இது விதி என்றார்.

காடு போகத் தயாரானபோது, தனது தம்பிமார் சீற்றம் அடைந்த வேளை, இராமன் சொன்னானே "இது விதியின் பிழை" இதுவே நினைவுக்கு வந்தது.

அவருக்கு உலகம் எங்கும் திறமையுள்ள மாணவர்கள் பலர் இருந்தபோதும் தனது 80 வயதில் தனக்கு மலர் வெளியிட நேர்ந்தபோது, லண்டனில் இருந்து இலங்கை வந்து அந்தப் பொறுப்பினை என்னிடம் ஒப்படைக்கும் அளவு என் மீது அவருக்கு இருந்த நம்பிக்கையை எண்ணிப்பார்க்கின்றேன். அந்த மலருக்கு நான் சூட்டிய தலையங்கம் என்ன தெரியுமா? "ஐயா! சதம் அடியுங்கள்" (Sir! Hit A Century!). ஆனால் நூற்றாண்டு காணாமல் 87வது அகவையில் அவர் நம்மைவிட்டு பிரிந்து விட்டார்.

இன்றைய ஆசிரிய சமூகம், அதிபர் குழாம் அவரது வாழ்வில் மேலோங்கிக் காணப்பட்ட சாதாரணர் நலம் பேணும் கோட்பாட்டைப் "பிறரின் நோய், தன்நோய் போல் காணும் உணர்வைப் பேண வேண்டும். அவ்வுணர்வை எமது மாணவர்கள் இடத்தே வளர்க்கவேண்டும்.

இதுவே நாம் அவருக்குச் செய்யும் கைமாறு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் வாழ்த்துச் செய்தி...

திருக்கோணமலை இராம கிருஸ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் ஒவ்வொரு வருடமும் யூன் 30ம் திகதியை பழைய மாணவர் தினமாக கொண்டாடி வருகின்றது. அத்தினத்தை நினைவு கூர்ந்து 8வது சாரல் செய்தி மடல் வெளிவருவதையிட்டு மிகவும் மகிழ்வடைகின்றேன்.

எமது கல்லூரி 119 வருடம் பழைமை வாய்ந்ததாகும். இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் 1937ம் ஆண்டு முதல் கல்லூரியுடன் இணைந்து செயற்பட்டு வருவது கல்லூரியின் மீது பழைய மாணவர்கள் கொண்டுள்ள பற்றுக்கான அடையாளமாகும்.

கல்லூரியின் வளர்ந்தோர்சார் அமைப்பு சங்கங்களாக செயற்படும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பன கல்லூரியின் அபிவிருத்தியிலும் தேவைகளை நிறைவு செய்வதிலும் காட்டும் காத்திரமான பங்களிப்பும் அர்ப்பணிப்பும் கல்லூரியை முன்நோக்கி நகர்த்திச் செல்ல உதவுகிறது என்பதில் பெருமை கொள்கின்றேன்.

புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் பழைய மாணவர்கள் கல்லூரி மீது கொண்ட பிணைப்பு காரணமாக இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் மற்றும் கொழும்பிலும் இங்கு வாழும் பழைய மாணவர்கள் தாய்ச்சங்கத்துடன் இணைந்து கல்லூரியின் பௌதீக அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி, மாணவர் நலன்புரி என்பனவற்றுக்காக எடுத்துக் கொள்ளும் பங்களிப்புகளை நன்றியுடன் நினைவு கூர்கின்றேன். அத்துடன் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் மாணவர்களிடையே நல்லுறவை ஏற்படுத்துவதற்காக பல செயற்பாடுகளை முன்னெடுத்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.


இச் செய்திமடல் பழைய மாணவர் சங்க செயற்பாடுகள், கல்லூரியின் தேவைகள் மற்றும் பாராட்டு நிகழ்வுகள், கல்வி அடைவுகள், இணைப்பாட விதான செயற்பாடுகள் என்பனவற்றை உள்ளடக்கி "சாரல்" என்னும் பெயரில் வெளிவருகிறது. இதற்காக உழைத்த பழைய மாணவர்களை பாராட்டுவதுடன் இப்பணி தொடர வாழ்த்துக்கள்

நன்றி
கல்விச்சேவையிலுள்ள அதிபர்
திரு.செல்வரெட்ணம் பத்மசீலன்

# காத்திரமான கல்வி சேவையில் 32 வருடங்கள் ....

கிழக்கிலங்கையின் தலைநகராம் திருக்கோணமலையில் குன்றக்குடி அடிகளார் கால் பதித்த அன்புவழிபுரத்தில் முன்னாள் அதிபர் இரத்தினவேல், தங்கேஸ்வரி தம்பதியினருக்கு 1956.01.13 இல் முருகதாஸ் மகனாகப் பிறந்தவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை தி/புனித சவேரியர் பாடசாலையிலும் ஆறாம் ஆண்டு முதல் தி/இ.கி.ச இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்று 1979 இல் உயிரியல் விஞ்ஞானத் துறையில் யாழ் பல்கலைகழகத்திற்கு தெரிவானார். 1983 இல் உயிரியல் விஞ்ஞான பட்டதாரியாக வெளியேறி களுத்துறை மாவட்டத்தில் தர்க்கா நகர் ஸாஹிறா கல்லூரியில் தனது முதல் ஆசிரியர் நியமனத்தைப் பெற்றார்.

1989இல் தான் கல்விகற்ற பாடசாலையான தி/இ.கி.ச இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றதால் இங்கு விலங்கியல், தாவரவியல் ஆசிரியராக கடமை யாற்றினார். இவர் கற்பித்த காலத்தில் உயிரியல் துறைக்காக பல்கலைக்கழகம் சென்ற மாணவர்கள் இவரின் கல்வி சேவைபற்றி நன்கு அறிவார்கள்.






உயர்தர விஞ்ஞானப்பிரிவு பகுதித் தலைவராகவும், 2009 முதல் பிரதி அதிபராக பாடவிதான அபிவிருத்தி நிதி நிர்வாக பிரிவுகளில் ஓய்வு பெறும் வரை கடமையாற்றிவந்தார். பாடசாலை அபிவிருத்திசங்கம், மாணவர் தலைவர்களின் தலைமை பொறுப்பாசிரியர், பழையமாணவர் சங்கத்தின் உப தலைவர் ஆகிய பதவிகளில் தனது பங்களிப்பை வழங்கியதுடன் இந்துக்கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள சித்தி விநாயகர் ஆலயத்தின் வளர்ச்சி, பராமரிப்பு ஆகியவற்றில் தனது பங்களிப்பை முழுமையாக வழங்கினார். மாணவர்களின் ஒழுக்க விடயங்களிலும் தனது பங்களிப்பை வழங்கி வந்தார்.

இவர் தனது ஆசிரியர் கடமைக்கு அப்பால் அன்பு வழிபுரம் ஞானவைரவர் ஆலய புனருத்தான பணியில் பொருளாளராக கடமையாற்றி அதன் வளர்ச்சியிலும் தன்னை அர்ப்பணித்தார்.

இரத்தினவேல் தங்கேஸ்வரி தம்பதிகளின் புதல்வனாக இ.முருகதாஸ் 12.01.2016 இல் தனது 60 வயதில் 32 வருட ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெற்றார். இவரது சேவையை பழைய மாணவர்கள் சார்பாக வாழ்த்துடன் இவர் நீண்ட ஆயுளுடன் சுகதேகியாக வாழ சித்தி விநாயகரை பிரார்த்திக்கின்றேன்.

நல்லதம்பி குமணன்
பழையமாணவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்கல்லூரி வரலாற்றில் உயர்திரு உத்தமப் பிராமண குலத்திலுதித்த பிரம்மஸ்ரீ சு.கு. குமாரசுவாமி ஐயா



பாடல் பெற்ற பெரும் பதியாகிய திருகோணமலையில் உத்தமப் பிராமண குலத்தில் 1905 ஆண்டு பங்குனித் திங்கள் 22ம் நாள் சுவாமிநாத குருக்கள் காசியம்மா தம்பதியினருக்கு மகனாக இவ்வுலகில் வந்துதித்தார் பிரம்மஸ்ரீ சு.கு. குமார சுவாமி ஐயர்

"உழைத்தவர்கள் என்றும் போற்றுதற் குரியவர்கள்" அந்தவகையிலே உயர் திரு.பிரம்மஸ்ரீ சு.கு.குமார சுவாமி ஐயர் அவர்கள் வாழ்ந்த காலத்தில் ஆற்றிய கல்விப்பணிகள், சமூக சேவைகள் என்றும் நெஞ்சில் நிறைந்தவையாகும்.

"பாரிய பணிகள் மக்கள் நலன் சார்ந்த சேவைகளைப் புரிபவர்களை காலத்தால் அழியாத நினைவுக்குள் நியமாக்குவது மனிதப்பண்பாடு" என்பது பெரியோர் வாக்காகும். இக்கூற்றுக்கமைய உயர்திரு பிரம்மஸ்ரீ சு.கு. குமாரசுவாமி ஐயர் அவர்கள் 1925 ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 6ம் நாள் விருப்புடனே ஆசிரியராக கடமையேற்று நற்பணி புரியத்தொடங்கினார். (1925 - 1960) இத்தோடு இராம கிருஷ்ண சங்கம் திருக்கோணமலையில் உதிப்பதற்கு உறுதுணையாக நின்று உள்ளத்தாலும் உடலாலும், வாக்காலும் பணி புரிந்து இராம கிருஷ்ண சங்கத்தைச் சேர்ந்த கோணேஸ்வரா வித்தியாலயத்தில் தொடர்ந்து முப்பத்திரண்டாண்டு தலைமை ஆசிரியாராக பணிபுரிந்து பதவியிலிருந்து போதே மறைந்தமையும் இங்கு விஷேடமாக குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தோடு இவர் மாண்புமிகு சுவாமி விபுலானந்த அடிகளாரின் வழிகாட்டலில் இராம கிருஷ்ண சங்க வளர்ச்சிக்காக பாடுபட்டு பல கடுமையான விடயங்களிற்கு முகம் கொடுத்து அதில் வெற்றியும் கண்டுள்ளார்.

இவரது அளவற்ற சேவையின் போது உண்மை, உழைப்பு, நேர்மை, அர்பணிப்பு ஆகியவற்றை அவதானித்த சுவாமி விபுலானந்த அடிகளார் 1935.06.11 இல் தனது கைபட எழுதிய கடிதமும் இதற்கு தக்கசான்றாகும்.

இவரது பிள்ளைகளில் ஒருவராகிய கலாநிதி கு.ஹேமசந்திரா அவர்களின் உதவியில் சுவாமி விபுலானந்த அடிகளின் சிலை எமது கல்லூரியில் திறந்துவைக்கப்பட்டது. இங்கு குறிப்பிடத்தக்க மற்றுமொரு விடயமாகும்.

அத்தோடு உயர்திரு பிரம்மஸ்ரீ சு.கு.குமாரசுவாமி ஐயர் அவர்கள் தனது சேவைக்காலத்தில் திருகோணமலை தமிழ் ஆசிரிய சங்கத்தை அமைத்து அதன் வளர்ச்சிக்கு அயராது உழைத்து 22 வருட காலம் சேவையாற்றி தலைவராகவும் செயற்பட்டுள்ளார்.

இத்தகைய அளப்பரிய சேவை யாற்றி உயர் திரு.பிரம்மஸ்ரீ சு.கு.குமாரசுவாமி ஐயர் அவர்கள் 1959ம் ஆண்டு ஆவணித்திங்கள் 30ம் நாள் இறைபதம் அடைந்தார் அன்னார் இவ்வுலகை விட்டு நீத்தாலும் அவருடைய காலத்தில் அவர் ஆற்றிய சேவை இந்துக்கல்லூரி வரலாற்றில் "நிரந்தர நினைவடையாளமாய் நிலை நாட்டப்பட்டுள்ளது" என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மையாகும்"

பழையமாணவர் சங்கம்
தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

## Thilak's Stand



எமது கல்லூரி துடுப்பாட்ட அணி தலைவராக இருந்து பல வருடகாலம் வெற்றிகளைப் பெற்றுத்தந்தவரும் பயிற்றுவிப்பாளருமான அமரர் பி.திலக்சன். அவரின் ஞாபகார்த்தமாக விருந்தினர் அணி அறை மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதனை அவரது 40 நண்பர்கள் ஒன்றிணைந்து ரூபா 1,097,369.00 செலவில் அமைத்து தந்துள்ளனர். இது அவரின் முதல் வருட நினைவு நாளின் போது (23.03.2016) திறந்து வைக்கப்பட்டது.

"Education is not the amount of information that is put into your brain and runs riot there, undigested all your life. We must have life – building, man – making, character making assimilatin of ideas"
"We want that education by which character is formed strength of mind is increased, the intellect is expanded and by which one can stand on one's own feet"
"It is man – making religion that we want. It is man making theories that we want. It is man – Making education all round that we want"

K.Ramachandra,
Editor
"Religious Digest"
Ullakamalam – 1966

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்த செல்வி கு.சதாசிவம் (உதவிக் கல்விப் பணிப்பாளர் – விஞ்ஞானம்) ஞாபகார்த்த கல்வி நிதியம்

மறைந்த செல்வி.கு.சதாசிவம் அவர்களின் பெறாமகன் பொன்னம்பலம் மனோகரன் எமது பழைய மாணவர் தற்போது லண்டனில் வசித்து வருகிறார் அவர் தனது தாயின் நினைவாக திருகோணமலை மாவட்டத்தில் விஞ்ஞானக் கல்வியையும் கல்வி கற்பதற்கு வசதி குறைந்த மாணவர்களுக்கு நிதி உதவியையும் 2009 ஆம் ஆண்டு முதல் வழங்கி வருகிறார்.

2009இல் க.பொ.த உயர்தரத்தில் எமது கல்லூரியில் இருந்து தேசிய மட்டத்தில் பல்கலை கழகத்துக்கு தெரிவான 7 மாணவர்களுக்கு தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (150,000.00) 2010 முதல் க.பொ.த உயர்தர மாணவருக்கு (4 பேருக்கு 2000.00 படி உயர்தரக் கல்வியை நிறைவு செய்யும் வரை மாதாந்தம் வழங்கப்பட்டது)

2011 முதல் க.பொ.த சாதாரணதர மாணவருக்கு வலய பாடசாலைகளை உள்ளடக்கியும் க.பொ.த (உயர்தரம்) திருகோணமலை வலய மட்டத்திலும் விஞ்ஞான விடைபோட்டிகளை நடத்தி வெற்றி பெற்ற மாணவர் மாணவிகளுக்கு பணப் பரிசும் சான்றிதலும் வழங்கப்பட்டது. எமது பழைய மாணவரான திரு.ச.சுதாகரன் அவர்கள் (உதவிக் கல்விப் பணிப்பாளர் விஞ்ஞானம், வலயக்கல்வி அலுவலகம் திருக்கோணமலை) பெரும் பங்களிப்புடன் போட்டிகளை நடத்தி வருகிறார்.



எமது கல்லூரியின் உயிரியல் விஞ்ஞான ஆய்வு கூடம் ரூபா650400.00 செலவில் திருத்தம் செய்து செல்வி.கு.சதாசிவம் சிரார்த்ததினம் பங்குனி 30 இல் கையளிக்கப்பட்டது.

எமது பழைய மாணவர் பொன்னம்பலம் மனோகரன் தன்னை வளர்த்து ஆளாக்கிய தாயின் நினைவாகவும் தான் கற்ற கல்லூரிக்காக தொடர்ந்து தனது பணியை முழுமையாக வழங்கி வருகின்றார் அவர் இன்றுவரை தொடர்ந்து பல இட்சம் ரூபா செலவு செய்துள்ளார். எமது பழைய மாணவர் சங்கம் சார்பாக அவரை வாழ்த்தவும் அவர் சேவை மூலம் எமது மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் திருக்கோணமலை மாவட்ட மாணவர்களும் பயன் அடைவார்கள்

சாம் ஸ்ரீதரன்

# பழைய மாணவர் சங்கமும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்...

எமது கல்லூரியின் அபிவிருத்திக்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பழைய மாணவர் சங்கம் என்பன இரு அமைப்புக்களாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் பெற்றோர்களாக இருக்கும் போது அங்கத்துவம் பெறப்பட்டு அதன் மூலமாக கல்லூரிக்கு ஆதரவு வழங்க முடிகின்றது. ஆயினும் பழைய மாணவர்கள் எனும் போது கல்லூரியின் தொடர்பு நிலைமை மாணவர் நிலைக்கு அடுத்தாக இரண்டாவது நிலையில் ஆயுள் முழுவதும் பழைய மாணவனாக இருக்க முடிவதுடன் ஆயுட்கால அங்கத்துவம் உறுதிப்படுத்தபட வேண்டும்.

இத்தகைய பழைய மாணவர் சங்கம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பது மேளத்தின் இரு பக்கங்கள் போல வலம் இடமாக தனது பணியை ஆற்றி வருகின்றது. குறிப்பாக கல்லூரி நிர்வாகத்துடன் இணைந்து கல்லூரி எதனை அடைய வேண்டுமோ அதற்கான ஒத்துழைப்பை பல்வேறு செயற்பாடுகளாக ஆதரவு அளித்து கல்லூரியின் கல்விதர உறுதிப்பாடு மற்றும் பௌதீகவளம், இணைப்பாட விதான, சமூக நலன்புரிக்கு ஆற்றும் பணிகள் முன்னுதாரணமாக குறிப்பிடப்பட வேண்டும்.

பழைய மாணவர் பழைய மாணவர் தினத்தில் அவர்களது வெளியீடான "சாரல்"ஏடு பல்வேறு விடயதானங்களை தாங்கி ஆவணமாக வெளிவருவதையிட்டு மகிழ்வடைவதுடன் பாராட்டு கின்றேன்.

எமது கல்லூரியில் ஒவ்வொரு வருடமும் தரம் 13 வரை கல்வி கற்று 180 மாணவர் அளவில் வெளியேறுகின்றனர். இவர்கள் எதிர்காலத்திலும் பல்வேறு தொழில் நிலைமைகளில் செயற்பட்டாலும் இவர்களது பார்வை, பணி கல்லூரியின் அபிவிருத்தி நோக்கியதாக அமைந்து மாவட்டத்திலும் மாகாணத்திலும் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் நிலைத்திருப்பதற்கு பழைய மாணவர்களின் பங்களிப்பு மற்றும் பெற்றோர்களது பங்களிப்பு இன்று போல் என்றும் கிடைக்குமென நம்புவதுடன் இப்பணியில் ஈடுபடும் சகலரையும் பாராட்டுகின்றேன்.

DR.எஸ்.சௌந்தராஜன்
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் ஓர் தொலைப் பார்வை

கல்வி அமைச்சால் நடாத்தப்படும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் கிழக்கு மாகாணத்திலே ஒரு முன்னிலைப் பாடசாலையாக எமது தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மிளிர்கிறது. கல்வி இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சாதனையை நிலைநிறுத்தியுள்ளது.

| வருடம் | தோற்றியோர் | தகைமைபெற்றோர் | தகைமைசத வீதம் | கல்லூரியின் பெறுபேறு | மாவட்ட உயர் பெறுபேறு | வெட்டுப் புள்ளி | 80 புள்ளிக்கு மேல் பெற்றவீதம் | 100 புள்ளிக்கு மேல் பெற்றவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2011 | 151 | 39 | 25.83 | 190 | 190 | 151 | 77.5 | 89.4 |
| 2012 | 142 | 42 | 29.58 | 188 | 191 | 147 | 88.2 | 72.5 |
| 2013 | 170 | 59 | 34.71 | 185 | 189 | 152 | 93.5 | 82.4 |
| 2014 | 147 | 63 | 42.86 | 188 | 194 | 150 | 95.2 | 90.5 |
| 2015 | 161 | 70 | 43.48 | 184 | 184 | 151 | 95.6 | 90.6 |

எமது கல்லூரியின் கடந்தகால பரீட்சைப் பெறுபேறுகளில் 2015ம் ஆண்டு பெறப்பட்ட பெறுபேறுகள் வெற்றித்தடத்தை பதித்துள்ளது. திருக்கோணமலை கல்வி வலயத்திலும், திருக்கோணமலை மாவட்டத்திலும், கிழக்கு மாகாணத்திலும் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் எமது பாடசாலையிலிருந்து அதிக எண்ணிக்கையான மாணவர்கள் தகைமைப் புள்ளிக்கு மேல் பெற்றனர் என்பதை உளப்பூரிப்புடனும் பெருமிதத்துடனும் கூறமுடியும். 2015 பரீட்சைக்குத் தோற்றிய 161 மாணவர்களுள் தகைமைப்புள்ளியான 151 புள்ளிக்கு மேல் பெற்றமாணவர்கள் 70 ஆகும். இது அண்ணளவாக 43.43 ஆகும். மேலும் 100 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள் 90.6 சதவீதமாகும். 80 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள் 95.6 சதவீதமாகும். பரீட்சைக்குத் தோற்றிய 161 மாணவர்களுள் 100 புள்ளிக்கு மேல் 146 மாணவர்கள் பெற்றது சிறப்பம்சமாகும்.

உயர் பெறுபேறான 184 புள்ளிகளை பெற்று முதல் தரத்தையும் எமது கல்லூரி பெற்றமை என்பது பெருமைக்குரிய விடயமாகும். அது மட்டுமல்லாமல் மாவட்ட ரீதியில் உயர் பெறுபேறுகளில் 1,3,3,6,8 போன்ற இடங்களை தன்வசம் கைப்பற்றியதும் எமது கல்லூரி மாணவர்கள் என்பதும் மிகவும் பெருமைக்குரிய விடயமாகும்.

எமது கல்லூரிக்கு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மூலமாக மதிப்பையும் பெருமையையும் பெற்றுத்தர வழியமைத்தவர்கள் (5ம்தர வகுப்பாசிரியர்கள், ஆங்கிலபாட ஆசிரியர்கள், சிங்களபாட ஆசிரியர் தரம் 5 இணைப்பாளரும் ஆவர்) வகுப்பாசிரியர்களான திருமதி.அனித்தா ஜெயநேசன், (தரம் 5A) திரு.ஜெ.ஜெயதர்சன் (தரம் 5B) திருமதி.உதயகுமார் தனலட்சுமி (தரம்-5C) திரு.சி.கிருஸ்ணகாந் (தரம் 5D) ஆகியோர்களுக்கும் ஆங்கில பாட ஆசிரியர்களான திருமதி.உதயன் சையொளிபாணு, ஜனாப்.எம்.ரி.இஜாஸ் அகமட், சிங்கள பாட ஆசிரியையான திருமதி ஜெனிட்டா சுரோமி ஜெயராஜ் ஆகியோர்களுக்கு ஆரம்பப்பிரிவு உப அதிபர் என்ற வகையில் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் மன மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் சாதனைகளைப் பெற்று எமது கல்லூரியின் பெயர் முதன்மை பெற இணைப்பாளராக செயற்பட்ட செல்வி.விஜயலட்சுமி சிவபுண்ணியம் அவர்களுக்கும் முதன்மை நிலை ஒன்றிலும் இரண்டிலும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் எனது நன்றிகளை உளப்பூர்வமாக தெரிவிக்கின்றேன்.

மேலும் இவ்வாறான வெற்றிப்படிக் கட்டுக்களை எட்டுவதற்கு தேவையான உதவி களையும் ஆலோசனைகளையும் வழங்கிய எமது கல்லூரி அதிபர் அவர்களுக்கும் எனது நன்றிகளை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றேன்.

திருமதி.திருச்செல்வி சுதாகரன்
உபஅதிபர் - ஆரம்பப்பிரிவு

## மூதூர் கல்வி வலயத்துடன் இணைந்து பழையமாணவர் சங்கத்தினால் க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு

பழைய மாணவர் சங்கமானது தனது கல்விசார் நடவடிக்கைகளை எமது கல்லூரியுடன் மட்டுப்படுத்தாது ஏனைய மாணவர்களும் நன்மை பெறவேண்டும் என்ற நோக்கில் மூதூர் வலயக்கல்வி அலுவலகத்துடன் இணைந்து எமது கல்லூரி ஆசிரியர்களுடன் நான்கு பாடசாலைகளை மையப் படுத்தி தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு 2015 ஜூன், ஜூலை, மாதங்களில் கருத்தரங்குகளை நடாத்தியது.

அதிபர் திரு.செ.பத்மசீலன் தலைமையில் பழைய மாணவர்களும் இணைந்து நடாத்திய கருத்தரங்குகளில் 200ற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்றி இருந்தார்கள் இவ்வருடமும் கருத்தரங் குகளை தம்பலகமம், நிலாவெளி போன்ற இடங்களில் நடாத்த திட்டமிட்டுள்ளோம்.

இ.கைலைவாசன்
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர வகுப்பு மாணவர்களின் 2015ம் ஆண்டுக்குரிய உயர்அடைவு மட்டம் பற்றிய ஓர் ஆய்வு

## G.C.E.(O/L) RESULT ANALYSIS-2015

| S.No | | Sat | A | % | B | % | C | % | S | % | W | % | Pass | Pass% |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Mathematcs | 161 | 39 | 24.224 | 20 | 12.422 | 40 | 24.845 | 25 | 15.528 | 37 | 23.0 | 124 | 77.02 |
| 2 | Science | 161 | 46 | 28.571 | 18 | 11.18 | 41 | 25.466 | 32 | 19.876 | 24 | 14.9 | 137 | 85.09 |
| 3 | English | 161 | 21 | 13.043 | 23 | 14.286 | 34 | 21.118 | 44 | 27.329 | 39 | 24.2 | 122 | 75.78 |
| 4 | History | 161 | 32 | 19.876 | 30 | 18.634 | 55 | 34.161 | 20 | 12.422 | 24 | 14.9 | 137 | 85.09 |
| 5 | 1st language(Tamil) | 161 | 18 | 11.18 | 49 | 30.435 | 49 | 30.435 | 34 | 21.118 | 11 | 6.8 | 150 | 93.17 |
| 6 | Hinduism | 133 | 66 | 49.624 | 25 | 18.797 | 20 | 15.038 | 14 | 10.526 | 8 | 6.0 | 125 | 93.98 |
| 7 | RC | 9 | 9 | 100 | - | 0 | - | 0 | - | 0 | - | 0.0 | 9 | 100.00 |
| 8 | NRC | 3 | 1 | 33.333 | 1 | 33.333 | 1 | 33.333 | - | 0 | - | 0.0 | 3 | 100.00 |
| 9 | Islam | 16 | 11 | 68.75 | 2 | 12.5 | 1 | 6.25 | 2 | 12.5 | - | 0.0 | 16 | 100.00 |
| 10 | Geography | 27 | 4 | 14.815 | 9 | 33.333 | 5 | 18.519 | 3 | 11.111 | 6 | 22.2 | 21 | 77.78 |
| 11 | Business &Accounting | 134 | 27 | 20.149 | 27 | 20.149 | 50 | 37.313 | 22 | 16.418 | 8 | 6.0 | 126 | 94.03 |
| 12 | Music | 21 | 9 | 42.857 | 6 | 28.571 | 4 | 19.048 | 2 | 9.5238 | - | 0.0 | 21 | 100.00 |
| 13 | Art | 31 | 7 | 22.581 | 7 | 22.581 | 3 | 9.6774 | 13 | 41.935 | 1 | 3.2 | 30 | 96.77 |
| 14 | Drama& Theatre | 32 | 5 | 15.625 | 8 | 25 | 16 | 50 | 3 | 9.375 | - | 0.0 | 32 | 100.00 |
| 15 | Tamil Literary | 51 | 16 | 31.373 | 14 | 27.451 | 9 | 17.647 | 9 | 17.647 | 3 | 5.9 | 48 | 94.12 |
| 16 | English Literary | 15 | 3 | 20 | 6 | 40 | 6 | 40 | - | 0 | - | 0.0 | 15 | 100.00 |
| 17 | ICT | 84 | 44 | 52.381 | 12 | 14.286 | 13 | 15.476 | 11 | 13.095 | 4 | 4.8 | 80 | 95.24 |
| 18 | Agriculture& food tech. | 8 | 2 | 25 | - | 0 | 4 | 50 | 2 | 25 | - | 0.0 | 8 | 100.00 |
| 19 | Health & physical Edu. | 69 | 29 | 42.029 | 16 | 23.188 | 10 | 14.493 | 5 | 7.2464 | 9 | 13.0 | 60 | 86.96 |

## G.C.E. (O/L) 9A

| No | Name | Result |
|---|---|---|
| 1 | Raveendranathan Sarangan | 9A |
| 2 | Barathithashan Sathurshan | 9A |
| 3 | Gnanachelvan Nishoban | 9A |
| 4 | Haritharan Risikeiththnan | 9A |
| 5 | Rathakrishnan Mathushaharan | 9A |
| 6 | Vashanthakumar Agaash | 9A |

## G.C.E. (O/L) 8A

| No | Name | Result |
|---|---|---|
| 1 | Vaseekaran Abilakshan | 8A |
| 2 | Thayaparan Arushan | 8A |
| 3 | Mohammudu Riswan Mohamed Rishan | 8A |
| 4 | Balasingam Nithushan | 8A |
| 5 | Kovintharajh Ravindranath | 8A |
| 6 | Koneswaran Shathosan | 8A |
| 7 | Aritharan Dilaxshithan | 8A |
| 8 | Thivagarasarma Karthick | 8A |



2015 சாதாரண தரப் பரீட்சையில் 9A பெறுபேற்றை பெற்ற மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களின் 2015ம் ஆண்டுக்குரிய உயர்அடைவு மட்டம் பற்றிய ஓர் ஆய்வு

**Results Analysis - Stream wise**

| Stream | No sat | No Pass | Total | No Qualified for university | No of All "A" | Merit pass if any | Top Rank | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | B | B | | B | B | B | District Rank | Island Rank |
| Physical science | 61 | 34 | 34 | 34 | 2 | 2 | 2 | 104 |
| Bio Science | 27 | 22 | 22 | 22 | 2 | 4 | 2 | 161 |
| Commerce | 61 | 46 | 46 | 5 | | | | |
| Arts | 21 | 16 | 16 | 0 | | | | |
| Total | 170 | 118 | 118 | 61 | 4 | 6 | | |


## க.பொ.த (உ/த) பரீட்சை 2015 மாவட்ட மட்டத்தில் முதல் பத்து இடங்களை பெற்று திருக்கோணமலை வலயக்கல்வி அலுவலகத்தினால் பாராட்டுப்பெற்ற மாணவர்கள்

| Name | Stream | Result | District Rank |
|---|---|---|---|
| 1. Sugumaran Sujan | Bio Science | 3A | 2nd |
| 2. Varnakulendran Sharanghan | Bio Science | 2A B | 3rd |
| 3. Sivavarathan Deluxshan | Bio Science | 3A | 4th |
| 4. Aswathkhan Ihthyaham | Bio Science | 2A B | 7th |
| 5. Sumsudeen Mohamed Ahsaan | Bio Science | 2A B | 9th |
| 6. Arulananthanm Gowshikan | Maths | 3A | 2nd |
| 7. Jeyakumar Branna | Maths | 3A | 3rd |

## 2015 பழைய மாணவர் தின ஒன்று கூடல் நிகழ்வுகள்...








Printed By: SS DIGITAL'S - 0777 695 635

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org